ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2022.06.15 |

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2022 மே

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2022 மேயில் குறைவடைந்த செயலாற்றத்தினைக் காண்பித்தன.**

**தயாரிப்பு முகாமையாளர் கொள்வனவு சுட்டெண்ணானது ஏப்பிறல் மாதத்தில் பருவகால ரீதியாக குறைவான பெறுமதியிலிருந்து 13.9 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2022 மேயில் 50.3 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** தொழில்நிலை மீட்சியடைதல் மற்றும் வழங்குநர் விநியோக நேரம் நீட்சியடைதல் என்பன கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் இச்சிறிதளவான முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக அமைந்தது. வழங்குநர் விநியோக நேரம் நீட்சியடைதலானது பொதுவாக தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவடைதலைப் பிரதிபலிக்கின்ற போதிலும், இத்தடவை இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்துவதில் தாமதம் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை போன்றவற்றிலிருந்து தோன்றிய வழங்கல் பக்கத் தடைகள் இதற்கு முதன்மைக் காரணமாக அமைந்திருந்தன. மேலும், தொழிற்துறைகளுக்கு இடையிலான ஊழியர் நகர்வுகளின் பகுதியளவிலான காரணத்தினால் மாதகாலப்பகுதியில் குறிப்பாக புடவைகள் மற்றும் ஆடைத்துறையில் தொழில்நிலை சிறிதளவு முன்னேற்றங்கண்டது.

அதேவேளை, புதிய கட்டளைகள், உற்பத்தி மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பன மாதத்திற்கு மாதம் அடிப்படையில் 2022 மேயில் மெதுவான வேகத்திலேனும் சுருக்கமடைந்து காணப்பட்டு, தயாரித்தல் நடவடிக்கைகளில் குறைவடைந்த செயலாற்றத்தினை எடுத்துக்காட்டின. உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளில் குறைவடைந்த செயலாற்றம், குறிப்பாக உணவு மற்றும் குடிபான தயாரிப்புத்துறையில் அவதானிக்கப்பட்டது. பண்டிகை மாதம் முடிவடைந்ததன் காரணமாக புதிய கட்டளைகளில் சுருக்கம் பகுதியளவானதாகவிருந்தது. மேலும், நீண்டகால நிச்சயமற்ற பொருளாதார துன்பங்களின் நிலைமைகளுக்கு மத்தியில், கேள்வியில் குறிப்பாக அத்தியாவசிய தன்மையிலுள்ள பொருட்களுக்கானவையில் ஏற்பட்ட வீழ்ச்சி, எச்சரிக்கையான வாடிக்கையாளர் செலவிடுதலுடன் இணைந்து உயர்வான பணவீக்கத்தின் காரணமாக கொள்வனவு சக்தியில் சீர்குலைவினை தோற்றுவித்ததாக பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். மேலும், தயாரித்தல் துறையின் உற்பத்திச் செயன்முறையானது பொருட்கள் பற்றாக்குறை மற்றும் முன்னெடுக்கப்படுகின்ற மின் துண்டிப்புகள் உள்ளடங்கலாக பல எண்ணிக்கையான வழங்கல் பக்க தடைகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுச் சந்தையில் வேண்டப்பட்ட அளவுகளில் கிடைக்கப்பெறாமை அத்துடன் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான நாணயக் கடிதங்களைத் திறப்பதில் இன்னல்கள் என்பனவற்றை பிரதான காரணமாகக் கொண்டு கொள்வனவுகளின் இருப்பு வீழ்ச்சியடைந்து பல உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியினை கணிசமானளவில் குறைப்பதற்கு நிர்ப்பந்தித்தது.

| மாறி | ஏப் 2022 | மே 2022 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **36.4** | **50.3** | **-** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 32.0 | 47.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 19.0 | 44.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 43.4 | 51.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 28.0 | 49.4 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 70.6 | 71.7 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நாட்டில் நிலவுகின்ற நிச்சயமற்ற பொருளாதார சூழ்நிலை காரணமாக அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் சீர்குலைந்தன.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 50.3**

2022 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 13.9 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் ஏப்பிறலிருந்து 0.1 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2022 மேயில் 52.4 பெறுமதியினைப் பதிவுசெய்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 மேயில் சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை யூரோ வலயம், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா ஆகிய நாடுகளின் இச்சுட்டெண் மெதுவான வீதத்தில் அதிகரித்தது. எனினும், சீனாவின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 மேயில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2022 யூன் 13இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் யூரோ வலயம் உள்ளடங்கலாக முக்கிய பிராந்தியங்களுக்கும் கொ.மு.சுட்டெண்ணை தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2022 மேயில் 42.4 சுட்டெண் பெறுமதிக்கு சிறிதளவு வீழ்ச்சியடைந்து தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாகவும் பணிகள் நடவடிக்கைகளில் சுருக்கத்தை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் ஆகிய துணைச் சுட்டெண்களில் வீழ்ச்சிகள் இதற்கு காரணமாக அமைந்தன.

2022 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2022 மேயில் குறிப்பாக, தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், உண்மைச் சொத்து, அத்துடன் கல்வி ஆகிய துணைத்துறைகளில் அவதானிக்கப்பட்ட குறைவடைதல்களுடன் இணைந்து புதிய வியாபாரங்கள் மேலும் வீழ்ச்சியடைந்தன.

மேயில் தொழில் நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிக்கு நீண்ட நேர மின் துண்டிப்புகள் மற்றும் சக்திப் பற்றாக்குறை உள்ளடங்கலாக வழங்கல் பக்க தடைகள் பிரதான காரணமாக அமைந்தன. இதற்கு மேலதிகமாக, உயர்வடைகின்ற விலைகளின் காரணமாக குறைவடைந்த கேள்வி மற்றும் நாட்டின் நிச்சயமின்மைகள் என்பனவும் தொழில்நிலைகளின் வீழ்ச்சிக்குப் பங்களித்தன. அதேவேளை, மாதத்தின் தொடக்கத்தில் ஏற்பட்ட சிவில் அமைதியின்மையும் தொழில்நடவடிக்கைகள் மீது எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. அதற்கமைய, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் அத்துடன் போக்குவரத்து ஆகிய துணைத்துறைகள் மாதகாலப்பகுதியில் பாரிய வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. இதற்கு மேலதிகமாக, சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் தொடர்ச்சியான வீழ்ச்சிக்கு மத்தியில் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானத் துணைத் துறைகளின் தொழில் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

தொழில் நடவடிக்கைகளின் வீழ்ச்சிக்கமைவாக தொழில்முடிவுறுத்தல்கள், ஓய்வூபெறுதல்கள் மற்றும் பதவிவிலகுதல்கள் என்பன காரணமாக தொழில்நிலை மேயில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை மின் துண்டிப்புகள், வழங்கல் பற்றாக்குறைகள் மற்றும் போக்குவரத்து இடர்பாடுகள் என்பன மாதகாலப்பகுதியில் நிலுவையிலுள்ள பணிகள் மேலும் அதிகரிப்பதற்கு இட்டுச்சென்றன.

| மாறி | ஏப் | மே | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **43.8** | **42.4** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 41.5 | 45.5 | + | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில் நடவடிக்கை | 40.5 | 39.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 49.5 | 38.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 52.8 | 51.6 | - | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 34.7 | 37.4 | + | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வழங்கல் பக்கத் தடைகள், பணவீக்க அழுத்தம் மற்றும் நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் நிச்சயமின்மைகள் என்பன காரணமாக அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேயில் மேலும் சீர்குலைந்தன. மேலும் வட்டி வீதங்கள் மற்றும் வரிகளின் அதிகரிப்பு பற்றி சில பதிலிறுப்பாளர்கள் கரிசனை கொண்டிருந்த அதேவேளை பன்னாட்டு நாணய கலந்துரையாடல்கள் மீது ஏற்பட்ட முன்னேற்றம் அத்துடன் செலாவணி வீதத்தினை நிலைப்படுத்தல் என்பன பற்றி சில பதிலிறுப்பாளர்கள் சாதகமான எண்ணப்பாங்கினைக் கொண்டிருந்தனர்.

**பணிகள்**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**42.4**

2022 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 1.4 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு., 2022 ஏப்பிறலிலிருந்து மாற்றமின்றி 2022 மேயில் 52.2 இனைப் பதிவுசெய்து, உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் விரிவடைதலைக் காண்பிக்கின்றது.

ஐக்கிய அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம், மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 மேயில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை சீனாவின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2022 யூன் 13இல் உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.